# தூதன்

தூதன்-24 செப்டம்பர் 2015 தூது-08

"ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும்,
எண்ணி முடியாத அதிசயங்களையும் கர்த்தர் செய்கிறார்."
யோபு 5:9

THAT THEY ALL MAY BE ONE

CHURCH OF SOUTH INDIA



## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| செயலர் மடல் | 10 |
| Harvest Festival Weekly Food Sales | 11 |
| எழுந்து நடந்தான் பிறவிச்சப்பாணி | 12 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 13 |
| நம்மேல் விழுந்த கடமை | 14 |
| Summer Camp Report - 2015 | 15 |
| ஆராதனை பாடல்கள் | 17 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 20 |
| தெரிந்து கொள்வோம் | 22 |
| Young Reader's Column | 24 |
| வேதவினா போட்டி | 26 |
| Health Tips | 28 |
| Birthday Celebrants | 31 |
| Wedding Anniversary Celebrants | 34 |



**P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645**
**Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae**

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான உடன் விசுவாசிகளே,

இறைமகன் இயேசுவின் இனிய திருப்பெயரில் உங்களை வாழ்த்துகிறேன். இறைவன் நமக்குத் தந்துள்ள வரங்களும் வளங்களும் ஏராளம், தாராளம். இவைகளில் மிகச்சிறப்பான வரம், கற்றல் - கற்பித்தல் வரம் (The art of learning and teaching), மிகச்சிறப்பான வளம் திருச்சபை (Church is the greatest of all resources of blessing). இவ்விரண்டையும் கொண்டாடும் வண்ணமாக இந்த மாதம் 11-ம் தேதியில் ஆசிரியர் தின விழாவையும், 25-ம் தேதி தென்னிந்தியத் திருச்சபை நிறுவக நாள் விழாவையும் நாம் கொண்டாட இருக்கிறோம். 1979-ம் ஆண்டிலிருந்து ஆண்டவர் நமது துபாய் தமிழ் திருச்சபையை போதித்து நடத்தியுள்ளார். ஆகவே ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்கு, அந்த நல்ல போதகனுக்கு, நல்லாசிரியருக்கு நம் நன்றிகளைச் செலுத்துவோம்.

### ஆசிரியர் தின விழா (Teachers day):

இந்திய நாட்டின் இரண்டாம் குடியரசுத் தலைவராக இருந்த சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்கள், தன் ஆசிரியர்களைக் கனப்படுத்தவும், ஆசிரியரின்றி இவ்வுலகில் யாருமே உருவாக இயலாது என்பதை உணர்த்தவும் தன் பிறந்த நாளான செப்டம்பர் 5-ம் நாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாட விழைந்தார். அந்த மாபெரும் தலைவரை மதிக்கும் வண்ணம் ஆசிரியர்களைக் கனப்படுத்தி நம் தாய்த்திருநாட்டிலே நாம் கொண்டாடி வருகிறோம். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற அடிப்படையிலே குருவுக்குச் சிறப்பிடம் கொடுக்கும் பண்பாடு கொண்டவர்கள் நாம். அது மட்டுமின்றி நமது மீட்பர் இயேசுகிறிஸ்துவை ஓர் ஆசிரியராக, வழிகாட்டியாகக் கொண்டிருப்பதால் ஆசிரியர் தினம் அர்த்தமுள்ள பண்டிகையாகத் திருச்சபைகளிலும் கொண்டாடப்பட வேண்டும். மத்தேயு 7:28-ன் படி அவர் வேதபாரகரைப்போல் போதியாமல் அதிகாரமுடையவராய் போதித்த படியால் ஜனங்கள் அவர் போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள் (Jesus, the most wonderful, radical and different teacher than the teachers of his times, the so called Pharisees and Scribes according to Matthew 7:28). அவரது போதனைகள் உலக அரசுகளை, உலக வாழ்வியலையே மாற்றின. புதிய வானத்தையும் புதிய பூமியையும் கொண்ட இறையாட்சியை உருவாக்கின. அப்போதகரின் பிள்ளைகளாகிய நாம் அவருக்குக் கீழ்படிந்து இவ்வுலகில் நமக்கு அவர் தந்துள்ள பல்வேறு நிலைகளிலுள்ள ஆசிரியர்களைக் கனப்படுத்தி, கீழ்ப்படிவோம்.

## திருச்சபை நிறுவக நாள் (CSI Day) :

செப்டம்பர் 27, 1947-ல் உருவாக்கம் பெற்ற ஆங்கிலிக்கன், மெதடிஸ்டு, சபையாளுகை, மூப்பராளுகை, சபைகளின் ஒன்றிப்பான தென்னிந்தியத் திருச்சபையின் நிறுவக நாள் உலகத் திருச்சபை வரலாற்றிலே இரண்டாம் பெந்தேகோஸ்தே (Second Pentecost) என்று அழைக்கப்படுகிறது. இந்த மாபெரும் ஐக்கிய (United and uniting church) சபையின் உறுப்புகளாக நாம் இருப்பது இறைவன் நமக்குத் தந்த அருட்கொடை. நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய ஆலயமாக இருக்கிறோம் (1 கொரி.3:16). அதே நேரம் கிறிஸ்து தலையாயிருக்கிற அவருடைய திருவுடலாகிய திருச்சபையில் நாம் அவயவங்களாயிருக்கிறோம் (1 கொரிந்தியர் 12:12).

எந்தப் பாகுபாடுகளையும், பிரிவினைகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் கடந்த ஒன்றிப்பாக திருச்சபை விளங்குகிறது. நமது தென்னிந்தியத் திருச்சபை இதற்கு மிகச் சான்றாக விளங்குகிறது. யோவான் 17:21-ன்படி அவர்கள் “எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக” என்ற மகா பிரதான ஆசாரியனான இயேசுநாதரின் இறைவேண்டலின் அடிப்படையில் உருவான திருச்சபை. இதற்கு நாற்புறமும் சம அளவுடைய சிலுவை உண்டு. அது சமத்துவத்தைக் குறிக்கிறது. இதற்கு நடுவில் தாமரை உள்ளது. உலகத்தில் இருந்தாலும் உலகத்தாரல்ல என்பதை சுட்டிக் காட்டுகிறது. அதுவே நெருப்புப்பிழம்பாகவும் தோன்றுகிறது. அவியாத அனலுள்ள திருச்சபை, ஆவியரால் உருவாக்கப்பட்ட திருச்சபை, அனல்மூட்டும் திருச்சபை என்பதை உணர்த்துகிறது. நாம் திரித்துவக் கடவுளின் ஒன்றிப்பின், ஒற்றுமையின் அடையாளமாய் விளங்க இறைவன் நமக்குத் துணைபுரிவாராக.

## Points to Ponder

I remember all my teachers from my 1st grade and all my VBS and Sunday school teachers from beginner grade. Do you remember?

St. Augustine once said, "If God is the father, the Church is the mother" Do you love and respect your mother and father in physical and spiritual sense?

அருள்திரு. S. கிறிஸ்தோபர் ரத்தினசாமி, ஆயர்.

# ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் இப்புதிய மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கர்த்தர் நம்மைக் கடந்த மாதங்களில் கிருபையாய், தயவாய், அன்பாய், தாயைப்போல அரவணைத்து பாதுகாத்திருக்கிறார். ஆகவே நாம், "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே அவர் பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" என்று சொல்லுவோம். Don't forget to thank God for everything. விடுமுறையில் புதிய அனுபவங்களையும், பெற்றோரைப் பார்த்த மகிழ்ச்சி, சகோதர சகோதரிகளைப் பார்த்த இன்பம், உறவினர்களைப் பார்த்த உற்சாகத்துடன் வந்திருக்கும் சிறுபிள்ளைகள், பெரியவர்கள், வாலிபர்கள், பெற்றோர்கள் அனைவரையும் ஆண்டவர் இந்த இரண்டு மாதங்களில் சுக பெலன் ஜீவனோடு காப்பாற்றிய கிருபைக்காய் தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இங்கேயே தங்கியிருந்த பிள்ளைகளுக்கும், பெரியோர்களுக்கும், பெற்றோருக்கும், வாலிப பிள்ளைகளுக்கும் ஆண்டவர் கொடுத்த பாதுகாப்பிற்காக, சுகத்திற்காக ஆண்டவருக்கு ஸ்தோத்திரம். புதிய வகுப்பிற்குள் சென்றிருக்கும் பிள்ளைகளுக்கு ஆண்டவர் நல்ல ஞானத்தையும், கிருபைகளையும் தரும்படியாய் ஜெபிப்போம். மீண்டும் தங்கள் பணித்தளங்களில் சேர்ந்திருக்கிற கடவுளின் பிள்ளைகளுக்கு தங்கள் கைகளின் பலனை சாப்பிடும்படியாய்ச் செய்வாராக. ஏனெனில் சம்பாதிக்கிறதற்கான பெலனைக் கொடுக்கிறவர் அவரே.

பெண்களும், ஆண்டவரின் சாயலில் இணையாக, துணையாக, அன்னையின் வடிவாகப் படைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைத் திருமறையின் வெளிச்சத்தில் காணமுடிகிறது.

1.ஏவாள் (இணையான படைப்பு - Equal Image) : ஆதியாகமம் 1:26,27.
வசனம் 27 - தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார்.

கடவுள் தம் சாயலில் ஆணையும், பெண்ணையும் ஒருவருக்கொருவர் இணையாகப் படைத்திருக்கிறார். சமமாகப் படைத்திருக்கிறார். இங்கு ஏற்றத்தாழ்வு இல்லாத படைப்பை நாம் பார்க்கிறோம். ஆகவே கடவுளுடைய படைப்பில் பெண்ணுடைய படைப்பும் எத்தனை முக்கியமானது, அழகானது, சமமானது, தூய்மையானது, பெருமையானது என்று பார்க்கிறோம்.

2.ஏவாள் (துணையான படைப்பு - Suitable Company) : ஆதியாகமம் 2:18.

மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று கண்டு ஏற்ற துணையை உண்டாக்குகிறார். இங்கு சார்ந்து வாழும் வாழ்வை கடவுள் முன்னிறுத்துகிறார். ஆண் இல்லாமல் பெண்ணுக்கு வாழ்வில்லை. பெண் இல்லாமல் ஆணுக்கு வாழ்வு இல்லை. ஆக இருவரும் சேர்ந்து துணையாக வாழ்வதே குடும்பம். ஒருவருக்காக ஒருவர் இருக்கவும், வாழவும், எந்தச் சூழ்நிலையிலும் மனிதருக்கு துணை தேவை. இன்பத்திலும், துன்பத்திலும், தனிமையிலும், வறுமையிலும் துணை இல்லாத வாழ்வு வறண்ட வாழ்வு. தனிமையைத் துரத்த வந்த தலைசிறந்த துணை பெண்.

3.ஏவாள் (அன்னையின் படைப்பு - Mother of all creation) : ஆதி. 3:20.

ஏவாள், "ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்". ஆணுக்கு மட்டுமல்ல, முழு படைப்பிற்கும் தாயாக விளங்குகிறார். What a great previlage to Eve! குடும்பத்திற்கு மட்டுமல்ல, எல்லா படைப்புகளுக்கும் தாய் ( Eve is the beginner of life). வாழ்வின் துவக்கமாக, நிறைவாக, அன்பின் அடையாளமாக, அரவணைப்பின் அடையாளமாக, ஏற்றுக்கொள்ளுதலின் அடையாளமாய் பெண் இருக்கிறாள். பெண் வழியாகவே கடவுள் வம்சங்களை விருத்தி செய்து வாழ வைக்கிறார். இது எல்லா படைப்புகளுக்கும் பொருந்தும். ஆகவே பெண்களும் கடவுளின் இணையான சாயலாகவும், துணையான சாயலாகவும், வாழ்வின் துவக்கமாகவும் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கடவுளை மாட்சிமைப்படுத்துவோம். ஆமென்.

திருமதி. தீபா கிறிஸ்தோபர்.
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி.

## MEMORY VERSE CONTEST - 2015

**The Memory Verse Contest is scheduled to be held on 18th September 2015.**

**You can download your respective memory verses from Pre-KG to Grade 12 from our church website.**

**LEARN AND BE BLESSED.**

நம்மை உள்ளங்கைகளில் வரைந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள கடவுளின் திருப்பெயரில் செப்டம்பர் மாத தூதன் வழியாக உங்களைச் சந்தித்து வாழ்த்துக்கள் பகிர்வதிலே மகிழுகிறேன்.

## திருமறை ஆய்வு ரோமர் 10-ம் அதிகாரம்

"சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும், நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது." (ரோமர் 10:1).

நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன். இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரேயரில் பிறந்த எபிரேயன், நியாயப் பிரமாணத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன். நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன் என பிலிப்பியர் 3:5-6-ல் தன்னை இஸ்ரவேலர் இரட்சிக்கப்படாததின் காரணத்தை இவ்வதிகாரத்தில் விளக்குகிறார்.

தனது நற்செய்திப் பயணத்தின்போது ஜெப ஆலயங்களில் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்ற அப். பவுல், நற்செய்தியின் முதல் அழைப்பு அவர்களுக்குக் கிடைத்தும், அவர்கள் இயேசுவைப் புறக்கணித்தும், பெந்தேகோஸ்தே நாளைத் தொடர்ந்து நற்செய்தி முதன்முதலில் அவர்களுக்கே வழங்கப்பட்டது என்பதற்கு சான்று பகர்கின்றார். தனது திருப்பணியில் இஸ்ரவேலர் வழியாகச் சந்தித்த தடைகள், எதிர்ப்புகள், துன்பங்கள் போன்றவற்றை மனதில் கொண்டு இவ்வதிகாரத்தை எழுதுகிறார்.

இஸ்ரவேலர் இரட்சிக்கப்படுவதற்குத் தடையாக இருக்கின்ற 3 காரியங்களை அப். பவுல் வரிசைப் படுத்துகிறார்.

### 1. தேவநீதிக்குக் கீழ்படியாமை (வசனம் 3) :

பாரபட்சமற்ற, பாசம் மிகுந்த தேவநீதியைப் புறக்கணித்து, சுயநீதிக்கு முக்கியத்துவம் தந்த இஸ்ரவேலரது வாழ்வில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்பது அப். பவுலின் கரிசனை. வானங்களே கேளுங்கள், கர்த்தர் பேசுகிறார், நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன். அவர்களோ எனக்கு விரோதமாய் கலகம் பண்ணினார்கள். மாடு தன் எஜமானனையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும். இஸ்ரவேலரோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது. ஐயோ, பாவமுள்ள மக்களினமும், அக்கிரமத்தால் பாரம் சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாய் இருக்கிறார்கள்.

கர்த்தரை விட்டு இஸ்ரவேலரின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கிப் பின்வாங்கிப் போனார்கள் என ஏசாயா 1:2-4லும் ஓசியா 4:1-6லும் எழுதப்பட்டுள்ளதை ஒப்பிட்டுப்பார்த்தால், தேவநீதியை விரும்பாத இஸ்ரவேலரின் தன்மையைக் காணலாம். தேவனை விசுவாசிப்போருக்கும், நியாயப்பிரமாணத்தின் வார்த்தையின்படி செயல் வெளிப்படும் தேவநீதிக்கு, இஸ்ரவேலர் கீழ்ப்படிந்தால் இரட்சிப்பு நிச்சயம் என்பது அப். பவுலின் கருத்து.

**2. தேவகுமாரனை விசுவாசிக்கவில்லை (வசனம் 9) :**
இஸ்ரவேலருக்குள் வேதபாரகர், பரிசேயர், சதுசேயர், எசீனியர், செலோத்தேயர் எனும் செல்வாக்கு மிக்க ஐந்து பிரிவினர்கள் இருந்தார்கள். உயிர்த்தெழுதல், தேவதூதர், ஆவி போன்றவை இல்லை என வாதிட்டு வந்த சதுசேயரின் வாக்குவாதம் பலரை விசுவாசத் தடுமாற்றத்திற்குட்படுத்தியது.

குறிப்பாக கிறிஸ்து இயேசுவின் சிலுவை மரணத்தை வரலாற்று நிகழ்வாக ஏற்றுக்கொள்ளும் யாரும் கூட மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்ததை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. 1 கொரி.15:12,13,17 -ல் “கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாய் இருக்கும். நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்” என கிறிஸ்து இயேசுவின் உயிர்ப்பு குறித்து அதிகமாக எழுதுகின்ற அப். பவுல், இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட தேவகுமாரனாகிய கிறிஸ்து இயேசுவையும், அவரது உயிர்ப்பையும் விசுவாசிக்கவேண்டும் என அழுத்தம் தருகிறார்.

**3.தேவ வசனத்துக்குக் கீழ்ப்படியாமை (வசனம் 16) :**
தேவ வசனத்தை அறிதலும், ஆராய்தலும், அங்கீகரித்தலும் இஸ்ரவேலர் அனைவரையும் இரட்சிப்புக்கேதுவாக நடத்தும் என்பது அப். பவுலின் அசைக்கமுடியாத நம்பிக்கை. ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்திலிருந்து இவ்வதிகாரத்தின் இறுதியில் மேற்கோள் காட்டப்பட்டிருக்கின்ற வசனங்களின்படி, அறிந்தவர்களெல்லோரும் ஆராய்ந்து பார்க்கவில்லை. ஆராய்ந்து பார்த்தோர் அனைவரும் கீழ்ப்படியவில்லை. ஏனென்றால், அதிகப்படியான ஐயங்களும், தர்க்கங்களும் அவர்களது இருதயத்தைக் கடினப்படுத்தியது.

இனியவர்களே, அப். பவுலைப்போல இஸ்ரவேலர் மட்டுமல்ல, உலகோர் அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது நமது விருப்பமும், விண்ணப்பமுமாக இருப்பது மறக்கமுடியாத உண்மை. அதே நேரத்தில் இரட்சிக்கப்பட்டவர்களின் பட்டியலில் நம் பெயரும் இடம் பெற்றிட தீவிரமாய் செயல்படவேண்டியது அவசியம். தேவநீதிக்கும், தேவவசனத்திற்கும் கீழ்ப்படிந்து தேவகுமாரனை விசுவாசித்து அறிக்கை செய்து ஆசி பெறுவோமாக.

இறைப்பணியில் உங்களுடன்,
அருட்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

உண்மையுள்ள மனிதருக்கு பரிபூரண ஆசீர்வாதங்களை வழங்குகிற இறைமகன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் தோத்திரம் சொல்லுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

## சிந்தனைக்கு ஒரு சிறு நிகழ்வு

அழகிய கிராமத்தில் ஒரு பெரிய செல்வந்தன் இருந்தார். அவர் கிறிஸ்தவர் தான். ஆனால், மனம் விரும்பியதையெல்லாம் செய்து உல்லாசமாக வாழ்ந்து வந்தார். திரளான செல்வம், ஏராளமான சொத்து, வேலை செய்ய பணியாட்கள், மக்கள் செல்வாக்கு, பெரிய குடும்பம், என ஒரு குறைவின்றி எல்லாமே திருப்தியாக இருந்தபடியினால் தன் வாழ்வைக் குறித்த கவலையே அவருக்கு இல்லை.

ஒரு நாள் இரவு அவர் தூங்கிக்கொண்டிருக்கும்போது அவருடைய காதிலே, “நாளை காலை ஆறு மணிக்கு ஒரு செல்வந்தன் மரிக்கப் போகிறான்” என்ற குரல் கேட்டது. அந்த குரலைக் கேட்டு நடுங்கி போனார் அந்த செல்வந்தன் திடுக்கிட்டு விழித்தார். தன் மனைவியை எழுப்பினார்.

ஐயோ, எனக்குப் பயமாய் இருக்கிறது, “ஒரு செல்வந்தன் மரிக்கப் போகிறான் என்கிற சத்தம் என் காதுகளிலே கேட்டது. நான் இந்த இரவு ஒரு வேளை மரித்தாலும் மரித்துவிடுவேன்” என்று சொல்லி, நடுங்க ஆரம்பித்தார்.

மனைவியோ, அதைக்குறித்து பெரிதாக எண்ணவில்லை. இது வெறும் கனவுதான் கவலைப்படாதீங்க, தூங்குங்க என்று சொல்லிவிட்டு அவள் தூங்கிவிட்டாள்.

ஆனால் அந்த செல்வந்தனால் தூங்கமுடியவில்லை. மருத்துவர்களுக்கு டெலிபோன் செய்து கார் அனுப்பி உடனே வரவழைத்தார்.

அதிகாலை இரண்டு, மூன்று மணிக்கெல்லாம் ஏராளமான டாக்டர்கள் வந்தார்கள். அவரைச் சோதித்துப் பார்த்துவிட்டு உங்களுக்கு நல்ல ஆரோக்கியம் இருக்கிறது. இருதயம் நன்றாக இயங்குகிறது. உங்களுக்கு ஒரு வியாதியும் இல்லை, படுத்துத் தூங்குங்கள் என்று சொல்லி விட்டு போய்விட்டார்கள்.

செல்வந்தனுக்கோ, தூங்க முடியவில்லை. தான் மரித்து விடுவதாக எண்ணி தன்னுடைய உற்றார், உறவினர் மற்றும் பிள்ளைகளுக்கெல்லாம் தகவல் கொடுக்கும்படி சொன்னார்.

அவரது உள்ளம் இடைவிடாமல் கலங்கிக்கொண்டேயிருந்தது. தனியாக இருக்க பயந்து போய் எல்லாரையும் அழைத்து அவர்களுடைய மத்தியிலே உட்கார்ந்து நடுங்கிக்கொண்டிருந்தார்.

உறவினர்கள் எல்லாரும் அவரைச் சூழ்ந்து நின்று, அவரை தைரியப்படுத்திக் கொண்டிருந்தார்கள். நகைச்சுவையாகப் பேசி அவரை சிரிக்க வைக்க முயற்சி செய்தார்கள். ஆனால், அவரால் அவைகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

எப்பொழுது காலை ஆறு மணியாகும், எப்பொழுது நான் மரிப்பேன் என்றெல்லாம் புலம்ப ஆரம்பித்துவிட்டார்.

காலை 5:45 மணி. அவருடைய வீட்டிலிருந்த வயதான பக்தியுள்ள வேலைக்காரன் அவரண்டை வந்து ஐயா, என் அருமை ஆண்டவர் என்னை அழைக்கிறார். இத்தனை நாட்களும் என்னைப் பராமரித்து, உதவி செய்ததற்கு நன்றி. நான் சென்று வருகிறேன் என்று சொல்லி விடைபெற்றுப் படுக்கையில் போய் படுத்தான். என்ன ஆச்சரியம்?! சில நிமிடங்களில் வேலைக்காரனுடைய ஜீவன் போய்விட்டது.

இதை செல்வந்தர் சிந்திக்க ஆரம்பித்தார். உலகத்தின் பார்வையில் நான் மிகப்பெரிய செல்வந்தனாய் இருக்கிறேன். ஆனால் கர்த்தருக்கு முன்பாக இந்த ஏழை வேலைக்காரன் மிகப்பெரிய செல்வந்தனாய் இருந்திருக்கிறானே என்று ஒருகணம் அதிர்ந்து போனார். ஏழை வேலைக்காரனின் தூய வாழ்வு, கிறிஸ்துவில் பெற்ற இரட்சிப்பு, அவரிடம் இருந்த தெய்வீக சமாதானம் இவைகள் தான் பெரும் செல்வம் என்பதை அன்றைக்கு செல்வந்தன் உணர்ந்தார். அந்த சம்பவமே அவரையும் கிறிஸ்துவின் இரட்சிப்புக்குள் வழிநடத்தியது.

அருமையானவர்களே, பூமியிலே நாம் ஏழையாக, படிப்பறிவு குறைந்தவர்களாக, மிகச் சாதாரணமானவர்களாக இருந்தாலும் அவருடைய பிள்ளைகளாக வாழ்ந்தால் கர்த்தருடைய பார்வையில் நாம் விலையேறப் பெற்றவர்கள். சிலுவையில் நமக்காகச் சிந்திய இரத்தத்தினாலே கிறிஸ்து இயேசு விலையேறப்பெற்ற இரட்சிப்பை நமக்கு வழங்கி, நித்திய ஆசீர்வாதங்களினால் நம்மை முடிசூட்டியிருக்கிறார்.

தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். (எபி. 2:9)

உங்களுக்காக ஜெபிக்கும்,
திருமதி. செலின் சாமுவேல்,
உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

கர்த்தரின் பெரிதான கிருபையால் இந்த புதியதொரு மாதத்திற்குள் நுழைந்திருக்கிறோம். விடுமுறை நாட்களை சந்தோஷத்துடன் கழித்து வரவும், பாதுகாப்பும், சுகமும், பெலனும் கொடுத்து நம்மை இங்கு கொண்டு வந்து சேர்த்த தேவனைத் துதிக்கின்றேன். நாம் கையிட்டுச் செய்யும் வேலைகளை கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுப்பாராக.

நமது ஆயர் Rev.Christopher Retnaswamy அவர்களின் ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், ஒத்துழைக்கவும் சபைமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். உங்களின் ஜெபத்தேவைகள், ஆலோசனைகள், Counselling போன்றவற்றிற்கு ஆயரை அணுகியோ அல்லது உங்கள் இல்லங்களுக்கு அழைத்தோ பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த 2 மாத விடுமுறைக் காலங்களில் நமது முன்னாள் போதகர்களைக் காணவும், தொடர்பு கொள்ளவும் கர்த்தர் அருள்புரிந்தார். குறிப்பாக Rev.J.Stephen ஆயரை மதுரை ஆஸ்பத்திரியில் காண நேரங்களைக் கர்த்தர் கொடுத்தார். அவர் நமது சபைமக்கள் அனைவரையும் அன்புடன் விசாரித்தார், ஜெபித்தார். அவரின் உடல்நிலை முற்றிலும் குணமடைய அனைவரும் ஜெபிப்போம். உங்களால் முடிந்த உதவிகளையும் செய்யும்படியாகவும் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த வருடம் Summer Camp-ஐ மிகவும் சிறப்புடன் நடத்திக் கொடுத்த திருமதி. ஜெயந்தி சம்பத் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பு ஆராதனையிலும் கலந்துகொண்டு சிறப்பித்த சிறுவர்களை வாழ்த்துகிறேன்.

Weekly Food Sales கர்த்தரின் கிருபையால் உற்சாகத்துடன் நடைபெறுகிறது. இதுவரை கலந்துகொண்ட அனைத்து குழுவினருக்கும் நன்றி சொல்லிக் கொள்கிறேன். இனிவரும் ஒவ்வொரு வாரங்களிலும் Prayer Cell-களுடன் சபைமக்கள் தங்களை இணைத்துக்கொண்டு பொருட்களை வாங்கவும், வைக்கவும் கேட்டுக்கொள்கின்றேன். இதன்மூலம் மறைமுகமாக நீங்கள் சபையின் ஊழியங்களை பெரிய அளவில் தாங்குகிறீர்கள்.

நாம் தாங்கி வரும் கொளகூர் ஊழிய மையத்தின் மருத்துவரையும் அவரது பெற்றோரையும் காண ஒரு வாய்ப்பு கிடைத்தது. இளம் மருத்துவர் தனது அர்ப்பணிப்பு பணியினிமித்தம் அநேக மக்களை கர்த்தரின் அண்டையில் சேர்த்துக்கொண்டு வருகிறார். மருத்துவரை நமது சபையின் அனேக உறுப்பினர்களுக்கும் அறிமுகம் செய்து வைக்கவும் வாய்ப்பு கிடைத்ததைக் குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். அவரின் மகத்தான பணி தடையின்றி நடைபெற நம் அனுதின ஜெபங்களில் நினைவு கூறுவோம்.

சிங் ரெத்னம், செயலர்.

## HARVEST FESTIVAL WEEKLY FOOD SALES

| Date | Sponsoring group |
|---|---|
| 04-09-2015 | Deira Prayercell |
| 11-09-2015 | Karama - B Prayercell |
| 18-09-2015 | International City Prayercell |
| 25-09-2015 | Karama - A Prayercell |
| 02-10-2015 | Bur Dubai Prayercell |
| 09-10-2015 | RAK Harvest Festival |
| 16-10-2015 | Sharjah - B & D Prayercells |
| 23-10-2015 | Qusais - A Prayercell |
| 30-10-2015 | Junior Church |
| 06-11-2015 | Sharjah - C Prayercell |
| 13-11-2015 | Sharjah - A Prayercell |
| **20-11-2015** | **Harvest Festival - Dubai** |

## NEW MEMBERS

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Jonathan Joseph Rajesh | 2532 | Dubai |
| 2 | Mr.James Samuel Durai | 2533 | Dubai |
| 3 | Mr. J.Daniel Deva Asirvatham | 2534 | Fujairah |
| 4 | Mr. Vijay Singh Sobitha Dhas | 2535 | Dubai |
| 5 | Mr. Kingsly Christhu Rajan | 2536 | RAK |
| 6 | Mr. D.Stalin Jeyapaul | 2537 | RAK |
| 7 | Mr. Arul Raj Paul Raj | 2538 | RAK |

## திருமறைப் பாட ஒழுங்குகள் - செப்டம்பர் 2015

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 04-09-2015 | தூய ஆவியாரின் வரங்களும் அருட்பணியும் | 2 இராஜா. 2:1-14 | 1 கொரி. 12:1-11 | யோவான் 15:12-27 | 8 |
| 11-09-2015 | இயேசு என்னும் குரு | நீதி. 4:1-19 | அப்போ. 22:1-5 | லூக்கா 4:31-44 | 141 |
| 18-09-2015 | என் சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் | சகரியா 8:12-19 | ரோமர் 5:1-5 | யோவான் 16:16-33 | 119 161-176 |
| 25-09-2015 | வழிபாட்டில் ஒற்றுமை | நெகேமியா 2:17-20 | ரோமர் 8:31-39 | லூக்கா 9:1-6 | 66 |

# எழுந்து நடந்தான் பிறவிச்சப்பாணி

எழுந்து நடந்திட்டான்
இயேசு நாமத்தில்
விழுந்த பார்வையில்
கருணை வரம்பெற்றான்

பிறவிச் சப்பாணி
வளர்ந்து மனிதனானான்
பிறர்கை உதவியுடன்தான்
பணிகள் செய்துவந்தான்

அன்றும் சுமந்துவந்தனர்
ஆலய அலங்கார
முன்வாசலின் முன்னாலே
தினப்படி வேலையாம்

இரக்க நெஞ்சிருக்கும்
வரையில் இதுகூடும்
இரந்துண்ணல் வழக்கமாம்
இன்றோர் அற்புதம்

உற்றுப் பார்த்துவிட்ட
யோவானும் பேதுருவுமாய்
சற்று நின்றுணர்ந்து
நோக்கிப்பார் என்றனராம்

பிச்சை இச்சையெழும்
பச்ச மனிதனுக்கும்
பிச்சை வாய்த்துவிடும்
என்றே பார்த்தானாம்

வெள்ளியும் பொன்னணியும்
என்னிடம் இல்லை,நான்
உள்ளதை உனக்கெனவே
தந்திடுவேன் என்றவனும்

நசரேயனா கிய,கிறிஸ்து
இயேசு நாமத்தில்
பிசகாமல் எழுந்துவிடு
பேசாமல் நடந்துவிடு

வலது கைவைத்தவன்
தூக்கி விட்டுவிட்டான்
நலமாய் எழுந்துநின்றான்
கால்கரள் சுகம்பெற்றான்

குதித்து எழுந்துநின்று
நிமிர்ந்து நடந்துகொண்டு
துதித்துக் கொண்டாடி
தொடர்ந்து செல்கின்றான்

பிச்சை கேட்டாலும்
உச்ச அற்புதமாம்
பிச்சைக்கு பதில்கிடைத்து
புதுவாழ்வு பிறந்திட்டது

பேதுரு யோவன்இரு
கரங்கள் பற்றியவனும்
புதுக்கால் ஊன்றிநின்றவன்
மகிழ்வைக் கண்டமக்கள்

கூடி ஓடிவந்தார்
கூடுதல் மகிழ்வுண்டார்
கூட்டங் கூடிவிட்ட
சாலோமோன் மண்டபத்தில்.

ஆதாரம் :
அப்போஸ்தலர் 3:1-11.
கவிதை எண் : 179.
ஆக்கம் : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக,
நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.
கலாத்தியர் 6:9

ஒரு...
குடை... நம்
நடை பயணம்
தடையின்றி தொடர
வெயில்...
மழை...
ஏற்று வாங்கி
நிழல் தரும்
சுமைதாங்கி
சுமப்பவரின்
சுமையை ஏற்று
சுகம் தரும்.
பசு... நம்
சிசு வளர
பால் ஈந்து - நம்
உடலுக்கு
உணவாய் உதவும்.
இவ்விதம்
இவை தரும்
சேவை
மனிதனுக்கு
தேவைதானே.
ஓ...
மானிடனே... நீ
மட்டும் நன்மை
செய்வதில்
மயங்குவதேன்
தயங்குவதேன்
பிறவிப்
பயன் என்பது
பிறருக்கு
பலன் பாராது
நன்மை செய்வதே.
இதில்...
சோர்வு வரலாமா

அது ஒரு
தீர்வுதானா
கிணற்றுத்
தண்ணீர்
இறைக்க இறைக்க
சுரக்கும்.
உதவியென
தேடிவருமுன்
ஓடிப்போய்
உதவுவதே
உத்தமம். இவை
கர்த்தர்
அறிவார்.
நமக்கென
அறுவடை
காலம் வரும்
அமோக
விளைச்சல் வரும்
மன உளைச்சல் தீரும்.
கர்த்தரின்
அருள் வரும்
பொருள் வரும்
பொன்மனமென
புகழ் வரும்
நன்மை செய்யும்படி
உனக்குத் திராணி
யிருக்கும்போது,
அதைச் செய்யத்
தக்கவர்களுக்குச்
செய்யாமல் இராதே.
நீதிமொழிகள் 3:27
பாத்திரம்
அறிந்து
பிச்சையிடு
என்பது பழமொழி

பணமும் இருந்து
உதவும் குணமும்
இருந்ததெனில்
உணவு
உடை
உறைவிடம்
இவையின்றி
பரிதவிப்போருக்கு
உதவுவதே
கர்த்தருக்கு
உகந்த தொண்டு.
வலது கை
கொடுப்பதை
இடது கை
அறியாது
வாரி வழங்குவாய்
நன்மை செய்வாய்
மென்மையாய்
வாழ்வாய்.
இதனுடன்...
கர்த்தரின் புகழ்
கீதம் பாடி
வேதம் பாடி
நிதம்...
ஜெபம் நாடி
தவமும் கூடி
வருமாயின்
வான் வழி
திறக்கும்
கர்த்தரின்
பரம்தனில்
நித்திய
ஜீவன் உண்டு
கண்டு கொள்வீர்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# நம் மேல் விழுந்த கடமை

மோட்சப் பிரயாணம் (The Pilgrim's Progress) என்ற புத்தகத்தை அறியாத கிறிஸ்தவர்கள் யாரும் இருக்க முடியாது. அதனை எழுதியவர் ஜான் பனியன் ஆவார். இங்கிலாந்தில் கிறிஸ்தவரல்லாத குடும்பத்தில் பிறந்த இவர், தனது சிறு வயதிலிருந்தே தனது மூதாதையரின் தொழிலான பாத்திரங்களை பழுது பார்த்து விற்பனை செய்யும் தொழிலை தந்தையுடன் சேர்ந்து செய்து வந்தார். குடும்பத்தின் ஏழ்மை நிலையால் பள்ளிப் படிப்பை கூட பாதியிலேயே விட வேண்டியதாயிற்று. இளம் பிராயத்தில் தீய மனிதனாக வாழ்ந்தார். நிம்மதியற்ற பனியன் 16வயதில் இராணுவத்தில் சேர்ந்தார். ஒருமுறை அரசின் ஆணைப்படி போருக்கு செல்ல உத்தரவிடப்பட்டார். ஆனால் கடைசி நேரத்தில் இவருக்கு பதிலாக வேறொருவர் அனுப்பப்பட்டார். அந்த நபர் முதல் நாளிலேயே போரில் மரணமடைந்தார். இந்த நிகழ்ச்சி இவரைச் சிந்திக்க வைத்தது. மயிரிழையில் தன் உயிர் தப்பினது ஏனோ? என்று யோசித்து நல்லவனாக வாழ விரும்பினார். ஆனால் அது முடியவில்லை. 19 வயதில் ஒரு கிறிஸ்தவ பெண்ணை மணமுடித்தார். மனைவி அடிக்கடி கிறிஸ்துவைப் பற்றி கூறியும் ஆண்டவரை ஏற்க மனமற்றவராகவே இருந்தார். ஒருநாள் தெருவில் பாத்திரம் பழுது பார்க்கும் மூன்று பெண்கள் இயேசுவைப் பற்றி கூறிக் கொண்டிருப்பதைக் கேட்டு தன்னை முற்றிலும் கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தார். ஆண்டவரை ஏற்றுக் கொண்ட கொஞ்ச நாட்களிலேயே அவரது மனைவி இறந்து போனார், தனது வாழ்வை முழுவதும் ஆண்டவருக்கு அர்ப்பணித்து, தன்னால் இயன்றதைச் செய்ய முன் வந்தார். பாத்திரங்களை பழுது பார்க்கும் வீடுகளில் இயேசுவைப் பற்றி அறிவிக்க ஆரம்பித்தார். அக்காலத்தில் இங்கிலாந்தில் போதகர் தவிர யாரும் சுவிசேஷத்தை பிரசங்கிக்கக் கூடாது என்ற சட்டம் இருந்தது. ஆகவே சட்டத்தை மீறிய குற்றத்திற்காக நீதிபதி முன் நிறுத்தப்பட்டார். இனி சுவிசேஷம் அறிவிக்கமாட்டேன் என கூறினால் விடுதலை ஆனால், அப்படி உறுதியளிக்க முன்வராததால் மூன்று மாத சிறைத் தண்டனை என நீதிபதி அறிவித்தார். இன்று விடுவிக்கப்படாமல் தேவ உதவியால் நாளை பிரசங்கிப்பேன் என்றார். அதனால் மூன்று மாத சிறைத் தண்டனை பன்னிரண்டு வருடங்களாக நீடித்தது. அதிக அழுக்கு நிறைந்த சிறிய அறையில் 50 பேருடன் தங்க வேண்டியதாயிருந்தது. மங்கலான வெளிச்சம், துஷ்டர்கள், சுகாதாரமற்ற இந்த நிலையில் தான் மோட்ச பிரயாணம் என்ற புத்தகத்தை எழுதினார். ஜான் பனியன் பிறப்பிலே கிறிஸ்தவரல்ல, படித்தவரல்ல. தேவன் இவரது ஆப்பணத்தைப் பார்த்தார். நாற்றமெடுக்கும் அறையில் உலகிற்கே மணம் வீசும் மோட்ச பிரயாணத்தை எழுதினார். “சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை, அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது, சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.” 1 கொரி 9:16.

ஆம், அத்தனை பாடுகள் மத்தியிலும் உலகமே போற்றத்தக்கதான ஒரு புத்தகத்தை ஜான் பனியனால் எழுத முடியும் என்றால், நம்மால் எத்தனை காரியம் தேவனுக்காகச் செய்ய முடியும். அவர் வருகைக்குள் நம்மால் இயன்றதைக் கர்த்தருடைய நாம மகிமைக்காகச் செய்து அவர் கரத்தினால் நல்ல பலனைப் பெற தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் கிருபை தருவாராக.

கரையேறி உமதண்டை நிற்கும் போது, இரட்சகா
உதவாமல் பயனற்று, வெட்கப்பட்டுப் போவேனோ?
ஆத்மா ஒன்றும் இரட்சிக்காமல் வெட்கத்தோடே ஆண்டவா
வெறுங் கையனாக, உம்மைக் கண்டு கொள்ளல் ஆகுமா?

இனிதா மோசஸ்

# SUMMER CAMP REPORT - 2015

Praise the Lord!

By the Grace of God, the Summer Camp 2015 was inaugurated by Rev. Christopher Rethnaswamy on 3rd July 2015. The theme for this summer camp was "Set Apart" as mentioned in Jeremiah 1 : 5 "Before I formed you in the womb I knew you, before you were born I set you apart". The summer camp was held every Friday, from 3rd July 2015 to 28th August 2015. We had eight weeks of lessons. An average of 75 children attended the Camp every week.

Every Friday we began with the Praise and worship session from 7.30 to 8.00 a.m. Our Junior Church kids sang songs, played instruments such as guitar, keyboard and led the worship in a vibrant way. They were given a great opportunity to use their talents and glorify God. The kids were very enthusiastic and equally dedicated in their commitment to play for God's glory. They regularly came every Wednesday for the practice that was led by Mr. Jason, Mrs. Ratna Priya, Mrs. Sheeba Reginald and our Pastor. I appreciate the parents who supported their kids by bringing them to the practice regularly.

The praise and worship session was followed by the Study session. The children were divided into two groups (KG to Grade 6 and Grade 6 to Grade 12). People who had the passion to serve the Lord came forward to teach the lessons in the Summer Camp. The syllabus we covered, focused on how God sets people apart and fulfils His plan through them.

The first lesson "Abraham- A Man Set Apart and A People Set Apart" was taught by Mrs. Sugirthy Thomas Prabhakaran and Mrs. Jemima. The second lesson "Moses - Set Apart Leader and the Law Giver" was taught by Mrs. Nisha Jason and Mrs. Agiema Tennyson. The third lesson "David - A man after God's own heart and a Builder of Nation" was taught by Mrs. Persis Josphine Wesley and Mrs. Ratna Priya. The fourth Lesson "Solomon - Unparallel in wisdom and a builder of the Temple of God" was taught by Miss Sneha Simon and Mrs. Agiema Tennyson. The fifth lesson "I am saved I am set Apart" was taught by Miss Divya, Mrs. Sirusti Rani and Mrs. Pamela. The sixth lesson "Set Apart in Holiness" was taught by Mrs. Priya Selvam and Mrs. Agiema Tennyson. The seventh lesson "Consequences" was taught by Mr. Moses and Mrs. Rukmani. The final lesson "My Choices" was taught by Mrs. Agiema Tennyson and Miss Mary.

During this summer camp children were presented with a variety of fun filled activities, games, power point presentations, skits and videos that enriched them with God's love for them and His unique plan for each and every one of them. Children who were deeply touched welcomed Jesus into their lives and also re-dedicated themselves to Him.

Our Pastor gave us a solid half hour in the Friday Service, to present a small program by the students who attended the Summer Camp. The children who attended the summer camp actively participated and gave a classic program which comprised of singing, memory verse recitation and a skit with a wonderful message. This Summer Camp was indeed a blessing both to the kids and to the elders as well.

I would like to thank the Pastor and the committee who really supported me and my team during the Summer Camp.

I give all glory, honor and praise to our Lord and Saviour Jesus Christ for the blessed Summer Camp 2015.

In Christ

Jayanthi Sampath, Convenor - Summer Camp 2015

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப பாடல் : பாமாலை 11 சேனையின் கர்த்தா

ஆராதனை இறுதி பாடல் : கீர்த்தனை 32 மங்களம் சதா

### 04-09-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 153 | ஆ என்னில் நூறு வாயும் |
| கீர்த்தனை | 56 | இயேசுவின் நாமமே திருநாமம் |
| பாமாலை | 181 | விருந்தைச் சேருமேன் |
| கீர்த்தனை | 117 | இயேசு என் அஸ்திபாரம் |
| கீர்த்தனை | 187 | கர்த்தரின் பந்தியில் வா |

### 11-09-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 43 | விண்ணோர்கள் போற்றும் |
| கீர்த்தனை | 110 | பாவியாகவே வாரேன் |
| பாமாலை | 135 | உந்தன் சொந்தமாக்கினீர் |
| கீர்த்தனை | 148 | பாதம் ஒன்றே வேண்டும் |
| கீர்த்தனை | 140 | ஏற்றுக்கொண்டருளுமே |
| கீர்த்தனை | 173 | தந்தானைத் துதிப்போமே |

### 18-09-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 2 | அலங்கார வாசலாலே |
| பாமாலை | 144 | தூய்மை பெற நாடு |
| கீர்த்தனை | 10 | சத்தாய் நிஷ்களமாய் |
| கீர்த்தனை | 186 | அன்பரின் நேசம் |
| கீர்த்தனை | 147 | பரனே திருக்கடைக்கண் பாராயோ |

### 25-09-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 166 | சபையின் அஸ்திபாரம் |
| பாமாலை | 107 | நிர்ப்பந்தமான பாவியாய் |
| பாமாலை | 112 | தெய்வன்புதான் மா இனிமை |
| கீர்த்தனை | 35 | சீர்திரியேக வஸ்தே |
| கீர்த்தனை | 200 | மறவாதே மனமே |
| கீர்த்தனை | 121 | விசுவாசியின் காதில் |

# திருச்சபை ஜெபநாள் 06-09-2015 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்... உமது உருக்கமான இரக்கங்களின்படி என்னைக் கடாட்சித்தருளும்." சங்கீதம் 69:16

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிறு தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய மாதத்தைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- Summer camp மிகவும் சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக
- விடுமுறை நாட்களில் தாயகம் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்று சுகபத்திரமாக திரும்ப, கர்த்தர் நம் திருச்சபை மக்களுக்குப் பாராட்டின தயவுகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் கூறுவோம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக,
- மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

